IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
GUDIYATHAM, VELLORE DISTRICT.

C.C.NO.410/2023

DEPOSITION OF WITNESS P.W.1

| | | |
|---|---|---|
| NAME | : | KOTTEESWARAN |
| FATHER'S NAME | : | MAHALINGAM |
| VILLAGE | : | SERUVANGI |
| OCCUPATION | : | HEAD MASTER |
| AGE | : | 44 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 29th day of July 2025.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் செருவங்கி கிராமத்தில் குடியிருந்து தலைமை ஆசிரியராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்கள் எனது ஏரியாவை சேர்ந்தவர்கள். கடந்த 29.04.2022 அன்று இரவு 07.45மணியளவில் நான் எனது வீட்டில் இருந்தபோது அக்கம் பக்கதினர் எனக்கு எனது அம்மாவையும், தம்பியையும் ஆஜர் எதிரிகள் நேதாஜி, ராஜ்குமார், பாபு ஆகியோர் அடித்துவிட்டதாக தகவல் சொன்னார்கள். நான் எனது வீட்டிற்கு சென்று பார்த்து எனது தங்கையை அழைத்து சென்று என்னுடைய வீட்டில் விட்டுவிட்டு மருத்துவமனைக்கு சென்று பார்த்து தகவல் கேட்டு காவல் நிலையத்திற்கு சென்று புகார் அளித்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார்மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது ஆகும். அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியிடப்படுகிறது. இவ்வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

புகாரை நான்தான் எழுதினேன். நேதாஜி, ராஜ்குமார் மற்றும் பலர் என்றுதான் புகாரில் சொல்லியுள்ளேன் என்றாலும் யார் யார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றாலும் சரிதான். அரசு மருத்துவமனையில் போலிசார் எனது அம்மாவை விசாரி'த்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள் என்றால் சரிதான். மருத்துவமனையில் வேறு யார் இருந்தார்கள் என்றால் என்னுடைய தம்பி இருந்தார். போலிசார் எனது தம்பியையும் மருத்துகூமனையில் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள். எந்த தேதியில் வாக்குமூலம் பதிவு செய்தார்கள் என்றால் சரியாக ஞாபகம் இல்லை. மருத்துவமனையில் எத்தனை நாட்கள் சிகிச்சையில் இருந்தார்கள் என்றால் 1 வாரம் இருந்திருப்பார்கள். எனது அம்மாவும், தம்பியும் அளித்த வாக்குமூலத்தை வைத்துதான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. சிகிச்சை முடித்து எனது அம்மாவும், தம்பியும் வீட்டிற்கு எப்போது வந்தார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மருத்துவமனையில் இருந்து வந்த திரும்பிய பின்னர் போலிசார் விசாரணை

செய்தார்களா என்றால் விசாரணை செய்தார்கள். எதிரிகள் புகார்தாரரின் தெருவில் ஒருவர் இறந்துவிட்டதால் கூட்டமாக இருந்ததில் தவறி விழுந்து புகார்தாரரின் அம்மாவிற்கு ஏற்பட்ட காயத்தை எதிரிகள் அடித்ததாக பொய்யாக புகார் அளித்திருக்கிறேன் என்றால் சரியல்ல. புகாரை 29.04.2022 அன்று கொடுத்தேன். 29.04.2022 ல் அளித்த புகாரை போலிசார் நடவடிக்கை எடுத்தார்கள் என்றால் சரிதான். புகாரை அளித்த பின்னர் என்னை எப்போது விசாரணை செய்தார்கள் என்றால் மறுநாள் விசாரணை செய்தார்கள். போலிசார் மாதிரி வரைபடம் தயார் செய்தபோது நான் உடன் இருந்தேன் என்றால் சரிதான். மாதிரி வரைபடம் எப்போது தயார் செய்தார்கள் என்றால் சரியாக ஞாபகம் இல்லை. சம்பவம் நடந்து ஒரு மாதம் கழித்துதான் நான் புகாரை அளித்தேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த அன்றே புகாரை கொடுத்தேன். அதற்கு பின் வேறு எந்த புகாரும் நான் அளிக்கவில்லை என்றால் சரிதான். நான் சம்பவம் நடந்த அளித்த புகாரை தவிர வேறு தேதியில் அளித்த புகாரை போலிசார் நடவடிக்கை எடுத்திருந்தால் அது பொய்புகார் என்றால் சரியல்ல. 19.05.2022 தேதியிட்ட புகாரில் போலிசார் நடவடிக்கை எடுத்திருந்தால் தவறு என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், சம்பவம் நடந்த தேதயில் புகார் அளிக்கவில்லை என்றாலும், எனது அம்மாவிடமும், தம்பியிடமும் வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றாலும் சரியல்ல. முதல் தகவல் அறிக்கையில் சொல்லியுள்ள தேதியில் புகாரை நான் அளிக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
GUDIYATHAM, VELLORE DISTRICT.

C.C.NO.410/2023

DEPOSITION OF WITNESS P.W.2

| | | |
|---|---|---|
| NAME | : | KANCHANA |
| HUSBAND NAME | : | MAHALINGAM |
| VILLAGE | : | SERUVANGI |
| OCCUPATION | : | RETIRED TEACHER |
| AGE | : | 73 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 29th day of July 2025.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் செருவங்கி கிராமத்தில் குடியிருந்து ஆசிரியராக பணிபுரிந்து ஓய்வுபெற்றுவிட்டேன். ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்கள் எனது ஏரியாவை சேர்ந்தவர்கள். கடந்த 29.04.2022 அன்று இரவு 07.45மணியளவில் நானும் எனது மகனும், வாய்பேச முடியாத எனது மகளும் விட்டில் இருந்தபோது நேதாஜி, ராஜ்குமார், பாபு ஆகியோர் எனது வீட்டு வாசலலில் நின்று காது கொடுத்து கேட்க முடியாதபடி அசிங்கமான வார்த்தையால் பேசிகொண்டிருந்ததால் நான் சென்று ஏன் என்று கேட்டதற்கு என்னை ஏய் தெவிடியா நீ என்ன பெரிய மயிரா என்று அசிங்மாக திட்டினார்கள் என்றும், நேதாஜி என்னை ராடால் முதுகிலும், கையிலும் அடித்தார். எனது மகன் வந்து தடுத்து கேட்டபோது அவனையும் அசிங்மாக திட்டி நேதாஜியும், பாபுவும் ராடால் முதுகில் அடித்து ராஜ்குமார் கட்டையால் எனது மகனை அடித்து காயம் ஏற்படுத்தினார்கள். பின்னர் அக்கம் பக்கத்தினர் சத்தம் கேட்டு வந்து என்யையும், எனது மகனையும் சிகிச்சகைாக அனு்பிவைத்தனர். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

சம்பவம் 29.04.2022ல் நடந்தது. என்னை மருத்துவமனையில் சிகிச்சைகாக யார் அனுமதித்தார்கள் என்றால் அக்கம் பக்கத்து விட்டில் இருந்தவர்கள் அனுமதித்தார்கள். போலிசார் என்னை எப்போது விசாரணை செய்தார்கள் என்றல் 30.04.2022 அன்று விசாரணை செய்தார்கள். போலிசார் விசாரணை செய்து கையொப்பம் பெற்றார்களா என்றால் கையொப்பம் பெறவில்லை. போலிசார் என்னை விசாரணை செய்து டைப் செய்தார்களா என்றால் கையால் எழுதினார்கள். நான் மருத்துகூமனையில் சிகிச்சயில் 4 நாட்கள் இருந்தேன். நான் மருத்துவமனையில் இருந்து 4 நாட்கள் கழித்து வீடு திரும்பிய பின்னர் தான் போலிசார் மாதிரி வரைபடம் வரைந்தார்கள் என்றால் சரிதான். நான் சொல்வது போல் போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை என்றாலும், விசாரணை செய்ததாக பொய்யாக சாட்சி

அளிக்கிறனேன் என்றாலும் சரியல்ல. நான் தவறி விழுந்துதான் எனக்கு காயம் ஏற்பட்டது என்றாலும், எதிரிகள் அடித்ததால்தான் காயம் ஏற்பட்டது என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/-R.Saranya.,
Judicial Magistrate,
Gudiyatham.